மாதர் போதினி

No. 244 எப்ரல் 1918 No. 4

THE EARS OF CORN

தானிய கதிர்கள்

ஒருநாள் அதிகாலையில் ராஜகுமாரத்தி தன் தகப்பனுடைய வீட்டை விட்டு தேசத்தைச் சுற்றிபார்க்கப் போனாள். கடைகள் எல்லாவற்றையும் கடந்துசென்று வெளி வயல்களுக்கு வந்தாள். அறுப்புக் காலமாயிருந்ததினால் பயிர் உயர்ந்து கதிர்கள் முதிர்ந்திருந்தன. அந் நேரத்தில் அவளுக்கு எதிரேவந்த ஒரு ரிஷி நின்று அவளைப் பார்த்து, ‘நான் உனக்கு ஒரு வரம் கொடுக்கப்போகிறேன். உன்னால் இயன்ற மட்டும் கதிர்களைப் பறித்து நல்ல கதிர்களைத் தெரிந்துகொள்; நேரம் வீணாய்ப்போகாதபடி சீக்கிரம் பறி. நீ பறித்த கதிர் எல்லாம் பிறகு உன் கையில் தங்கரத்தினங்களாகும், ஆனால் மறுபடியும் இந்த வழி வரக்கூடாது. இதே நாளில் மாத்திரம் பறிக்கக்கூடும். சமயத்தைத் தப்பவிடாதே’ என்று சொல்லி அவளை ஆசீர்வதித்துப் போய்விட்டார்.

இந்த வாக்கைக்கேட்ட பெண் பேரானந்தங்கொண்டு தான் தரிக்கக் கூடிய அவ்வளவு பொன்னும் ஆபரணங்களும் இருந்தால் எப்படி

இருக்கும் என்று நினைத்து பயிர் கிட்ட ஓடினாள். ஆனால் கிட்ட வந்தபோது கதிர்கள் அவளுக்கு எட்டாத உயரமாயிருந்தன. அப்பொழுது தட்டையைப் பிடித்து மடக்கி கதிரைப்பறிக்கக் கைநீட்டின வுடன் ஒரு நேர்த்தியான வண்ணாத்திப்பூச்சி கிட்டப்பறந்து அவள் கன்னத்தைத் தொட்டது. அதைப் பிடிக்கத் தாளை விட்டாள். உடனே முன்போல அந்தக் கதிர் அவளுக்கு எட்டாத உயரம் போயிற்று. ஒரு நிமிஷம் ரிஷியின் வாக்கை மறந்துவிட்டு தனக்குமுன்னே பறந்த வண்ணாத்திப்பூச்சியைப் பிடிக்க ஓடினாள். ஆனால் அது மேலே ஆகாயத்தில் மறைந்தது. ஓ! நான் விளைத்த கதிரைப் பறிக்கத் திரும்பிப் போகவேண்டும் என்று பார்த்தாள், ஆனால் ஒரு சுவர் எழும்பியிருந்ததி னால் அப்படிப்போக முடியாமற்போயிற்று. அது போகட்டும், ஒன்று தப்பிப்போனாலும் இன்னும் நூறு இருக்கும் என்று யோசித்து, நல்ல பெரிய கதிர்களைப் பறிக்கத் தேடிப்போனாள். எல்லாம் அதிக உயரமா யிருந்ததினால் இலேசாய்ப் பறிக்கக்கூடிய சிலவற்றைக் கண்டுபிடிக்கத் தேடி ஓடினாள். ஒன்றைக் கண்டு பறித்து அது நல்லதல்ல என்று கண்டாள். ஆகிலும் அதைக் கையில் வைத்துக்கொண்டாள். அதை விட நல்லவைகளைத் தேடிப்போகையில் கொஞ்சம் பொறுமையோடும் சுறுசுறுப்போடும், பறிக்கக்கூடிய அநேக கதிர்களை விட்டுச் சென்றாள். 'இன்னம் பொழுது இருக்கிறதினாலும் இந்த வயல் அதிக பெரியதா யிருக்கிறதினாலும் எனக்கு வேண்டியநேரம் இருக்கிறது, எனக்குக் கிட்ட இருக்கிற கதிர்களைவிட தூரமாயிருக்கிறவைகள் பெரியதாய்த் தோன்றுகின்றன' என்று சொல்லி இன்னும் நடந்து போனாள். அவைகளைச் சேர்ந்தபோது முன் பார்த்தவைகளைப்போலவே இவை களும் பறிக்கக் கஷ்டமாயிருந்தது.

இப்படி இருக்கும்போது கொஞ்சநேரம் உட்கார்ந்து சில பூக்களைப் பறித்து ஆயாசம் அடைந்து தூங்கினாள். விழித்தபோது சூரியன் மேலே இருந்தது, பகல் பாதி ஆயிற்று. இப்போது சீக்கிரமாய்ப் பறிக்கவேண்டும் என்று நினைத்து எழுந்தாள். ஆனாலும் கொஞ்சம் நிலம் மாத்திரம் இருந்தது, பயிர்களும் அத்தனை இல்லை, கதிர்களுஞ் சின்னதாயிருந்ததென்று அறிந்து, 'முன் இருந்த இடத்தில் நேர்த்தியான வைகள் இருக்கிறது, நான் அங்கே திரும்பிப்போகவேண்டும்' என்று யோசித்துப் போகப் பிரயாசப்பட்டாள். சுவர் பின்னாலே எழும்பினதி னால் முன்னே போகக்கூடுமேயொழிய பின்னே போகமுடியாது. அப்போது மனந்தளர்ந்து இங்கு ஒன்று அங்கு ஒன்று பறித்து நல்லவை கைளைத்தேடி சீக்கிரமாய் நடந்துபோனாள்.

இதினால் நாம் கற்றுக்கொள்ளும் பாடங்களைச் சிந்திப்போமாக.

HOW MOTHERS CAN BRING THEIR CHILDREN TO CHRIST

சிறுபிள்ளைகளை தாய்மார் எப்படி கிறிஸ்து விடம் கொண்டுவரலாம்

நதியில் போடப்பட்ட பாலனாகிய மோசேயைக் கண்ட பார்வோனின் மகள், 'நீ இந்தப் பிள்ளையை எடுத்துக்கொண்டுபோய், அதை எனக்கு வளர்த்திடு' என்று பெற்ற தாயிடம் கொடுத்தாள். அதுபோல தாய்மார் தங்கள் பிள்ளைகளை ஆண்டவருக்காக வளர்க்கும் கூலியாட்கள் தான். 'பிள்ளையைக் கொண்டுவா' என்ற உத்தரவு அரண்மனையிலிருந்து வரும்வரையில் வளர்க்கவேண்டியவர்கள். சிறுபிள்ளைகள் தேவனுடைய ராஜ்யத்திற்குச் சொந்தமானவர்கள். கோபம், பகை வர்மம், வஞ்சனை இன்றி எப்போதும் சந்தோஷம் உள்ளவர்கள். பெரியவர்களும், மனம் திரும்பி சிறுவர்களைப்போல் ஆகாவிட்டால் தேவனுடைய ராஜ்யம் சேரமுடியாது என்பது வேதசத்தியம்.

10 மாசம் முதல் 4 வயது வரையில் சிறுவருக்கு வீடுதான் பள்ளிக் கூடம், தாய்தான் உபாத்தியாயர். பெற்றோரின் இன்பமான பார்வை, அன்பான சம்பாஷணை, சுத்தமான உடுப்பு, அழகான தோற்றம், இனி

மையான கீதம் இவைகளே பிள்ளைகள் படிக்கும் பாடம். ஆகையால் தாய்மார் சர்வ ஜாக்கிரதையாய், பாட்டு, வேதவாசிப்பு, ஜெபம், வேத சம்பாஷணை முதலியவற்றை ஒழுங்காய் கையாடவேண்டும். 'தப்பிதம் என்று சொல்லாதே, தப்பிதத்தால் உண்டாகும் நஷ்டத்தைச் சுட்டிக் காட்டு' என்று டாக்டர் பிரடரிக் புரோபல் சொல்லுகிறார்.

ஆகாரம், ஆகாயம், பானம் முதலியவற்றால் சிறுவரின் தேகம் விருத்தியாகும். அப்படியே வேதவசனமாகிய ஆகாரத்தைப் பிள்ளைகள் தினசரி உட்கொள்ளச் செய்யவேண்டும். பேசப் படிக்கும்போதே, 'இயேசு கண்ணீர்விட்டார்,' 'ஜீவ அப்பம் நானே,' 'நானே நல்ல மேய்ப்பன்,' 'பிசாசுக்கு எதிர்த்துநில்லுங்கள்,' 'கர்த்தர் என் மேய்ப்பர்' முதலிய வசனங்களை சிறுவர்களைக் கைகளில் எடுத்துப் பாலும் பழமும் பிசைந்து, சாப்பிடு கண்ணே என்று ஊட்டுவதுபோல் செல்லப் பேச்சால் சிரித்த முகத்துடன், சந்தர்ப்பம் உண்டாகும்போது படித்துக் கொடுக்கவேண்டும். சரித்திரங்களைச் செல்லப்பெயர்வைத்து, 'எலியா தாத்தா கதை,' 'ரூத் அக்காள் பாடம்,' 'எஸ்தர் ராஜாத்தி பாட்டு,' 'யோசேப்பு அண்ணன் கதை,' 'சிங்கத்தைக் கொன்ற சிறுவன்,' 'கோலியத்தை வென்ற பையன்' என்ற பேர்களால் பிள்ளைகளின் பாஷையில் சொல்லிக் கொடுத்து வாசிக்கப்படித்தவுடன் வேதபுஸ்தகத்தில் அந்தச் சரித்திரங்களை வாசிக்கும்படி செய்யவேண்டும். 1-ம் சங்கீதம், 34-ம் சங்கீதம், 23-ம் சங்கீதம், 121-ம் சங்கீதம், 1 கொரி. 13-ம் அதிகாரம், மலைப்பிரசங்கம், ரோமர் 12-ம் அதிகாரம் முதலியவற்றைப் பாராமல் மனனம் செய்யப் பழக்கவேண்டும். வேதத்தை தண்டனையாகப் படித்து ஒப்புவிக்க செய்யக்கூடாது. அதனால் பிள்ளைகளுக்கு வேதத்தின்பேரில் இருக்கும் பிரியம் கெட்டுப்போகும்.

'சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும். கர்த்தரை நம்புகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாது' என்ற வசனத்தை தண்டனையாகப் படிக்கச் செய்தால், பசியாயிருக்கும் பிள்ளை, கர்த்தர் தன் பசியைத் தீர்க்கமாட்டார் என்ற எண்ணங்கொள்ளும். ஆகையால் ஒரு வசனத்தை அல்லது வேதபாகத்தைப் பாராமல் சொன்னால் வெகுமதி கொடுப்பதாய் பிள்ளைகளை உற்சாகப்படுத்தி, படிக்கச்செய்யவேண்டும். சாப்பிடும்போது ஒரு பிள்ளையை ஜெபிக்கும்படி சொல்லவேண்டும். குடும்பஜெபத்தில் சிலசமயம் வேதத்தை தகப்பன் அல்லது தாய் வாசித்து, ஒவ்வொரு வார்த்தையாக பிள்ளைகளை பின்னால் சொல்லும்படி பழக்கவேண்டும். தாய்மார் தாலாட்டும்போது 'சாலேமின் ராஜா,' 'நீ சாய்ந்து தூங்கு கண்ணே,' 'கடல் கொந்தளித்து பொங்க,' 'ராஜன் தாவீதூரிலே,' 'தேவபிதா எந்தன் மேய்ப்பனல்லோ,' 'துள்ளி துள்ளி பாலனே,' 'இங்கே நொந்து கொள்கிறோம்' என்ற பாட்டுகளையும், சாஸ்

திரியார் செய்த 'பேரின்பகாதல்,' 'ஜெபமாலே,' 'நித்தியானந்த கவிதை,' 'எக்கால கண்ணி' முதலிய வேதபாட்டுகளைப் பாடினுல் பிள்ளைகளின் களங்கமற்ற இருதயம் பூரிப்படையும். கோவிலுக்குப் போகும்போது கீர்த்தனே அல்லது சுவிசேஷ பங்குகளே அவர்கள் கையில் கொடுத்து கூட்டிப்போகவேண்டும். எப்போதும் சபை அல்லது பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுடன் உட்காரும்படி பழக்கவேண்டும். காணிக்கைக் காசைப் பிள்ளைகள் வேலைசெய்து சம்பாதிக்கச் செய்யலாம். ஆராதனைமுடிந்து வீட்டுக்கு வந்தவுடன் ஒரு பிள்ளையை பிரசங்கத்தில் வந்த கதை அல்லது சரித்திரத்தைச் சொல்லும்படி செய்து இடையில் கேள்வி கேட்கவேண்டும். சபையில் வைக்கப்படும் ஒவ்வொரு கூட்டத்திற்கும் பிள்ளை போகும்படி செய்ய, அல்லது கூட்டிப்போகவேண்டும். பேசத்தெரியாத பிள்ளைகளைக்கூட ஜெபக்கூட்டத்தில் அமைதியாயிருக்க, கண்ணை மூட, முழங்காலில் நிற்க, பழக்கவேண்டும். வீட்டின் ஒரு அறையைக் கொடுத்து அதில் அவர்கள் தங்கள் இஷ்டமாய்ப் பாடவும் ஜெபிக்கவும் செய்வது, அவர்கள் பெரியவர்களாகும்போது அவர்களைத் தியானத்தில் விருப்பங்கொள்ளச் செய்யும். 'தொட்டிற்பழக்கம் சுடுகாடுமட்டும்' என்ற முதுமொழி தவருது. கோவில் சட்டை, பாவாடை, உடுப்பு என்று பேரிட்டு அவைகளை எப்போதும் சுத்தமாய்வைக்க பிள்ளைகளை ஏவவேண்டும். கெட்ட பிள்ளைகளுடன் கூடி விளையாடும்போது, அவர்களை அப்போதே அடிக்கவாவது, கோபிக்கவாவது கூடாது. வீட்டில், கெட்டபிள்ளைகளின் கதைகளைச் சொல்லி, அதனுல் உண்டாகும் மோசம், கெடுதி எவ்வளவு என்று படிப்பிக்கவேண்டும். ஜெபத்தில் ஒழுங்கீனமாயிருந்தால் உடனே கோபிக்காமல், ஒழுங்காயிருந்த பிள்ளைகளை சுட்டிக்காட்டி, 'அவர்களுக்கு தேவன், மோட்சத்தில் வெண்ணங்கி, பொற்கிரீடம், கின்னரம் கொடுப்பார். உனக்குக் கிடையாவிட்டால் உனக்கு விசனமாயிருக்குமே' என்று சொல்லி, அவர்களை அதன்மேல் பிரியம் வைக்கச் செய்யவேண்டும். சிறுவர்களுக்கு நரகத்தைப்பற்றி சொல்லக்கூடாது. அது அவர்களை பலவீனப்படுத்தும். மோட்சத்திற்குப் போன சிறுவர்களின் பெயரைச் சொல்லவும்.

உதாரணமாக, தாவீது, சாமுவேல், யோசேப்பு, யோவான், தீமோத்தேயு, இவர்களின் இளமையைப் படிக்கச் செய்யவேண்டும். இவர்கள் மோட்சத்தில் இருக்கிருர்கள் என்று சொல்லி அவர்கள் படத்தைக் காட்டலாம். வேதத்தில் அடங்கிய மற்ற பிள்ளைகளின் படங்களை வீட்டில் தொங்கவைக்கவேண்டும். குழந்தேசுநாதர் படத்தையும் காட்டவேண்டும். சுவாசிப்பதற்கு காற்று எப்படி அவசியமோ அப்படியே ஜெபம் அவசியம். சாப்பிடும்போது, பள்ளிக்கூடத்திற்குப் போகுமுன், படுக்கைக்குப் போகுமுன், ஜெபிக்கும்படி செய்வது நல்லது. கூடு

மானல் தாய் முன்னல் ஜெபிக்க, கூடவே பிள்ளையும் ஒவ்வொரு வார்த்தையாகப் பின்னல் சொல்லும்படி பழக்கவேண்டும். பெற்றோரின் ஜெபஜீவியமே சிறந்த மாதிரி. தனித்து பிள்ளைகளோடு ஜெபிப்பது நல்லது.

(இன்னும் வரும்.)

கிறிஸ்தியான் டாசன்.

CHILDREN'S PAGE

பாலர் பக்கம்

AN UGLY HAND—A LOVING HAND

அவலக்ஷணமான கை—நேச கை

எல்வி என்னும் சிறு குழந்தையும், அவளுடைய தாயாரும் ஒரு நாள் தங்கள் வீட்டில் தனித்திருந்தார்கள். எல்வி மிகவும் சிறுபிள்ளையாய் இருந்தாலும் விளையாட்டு சாமான்கள்பேரில் அதிகப் பிரீதியுள்ளவள். ஒருநாள் இவள் தான் அதிகமாய் நேசித்துவந்த பொம்மையை வைத்து தன் வீட்டில் விளையாடிக்கொண்டிருந்தாள்.

அப்படி விளையாடிக்கொண்டிருக்கும்போதே அவள் தன் தாயைப் பார்த்து, 'அம்மா! என்ன நேர்த்தியான உடுப்பு இந்த பொம்மைக்குப் போட்டிருக்கிறது! இதை அத்தை எனக்குக் கொடுத்தார்கள். இப்போது இப்பொம்மையின் உடுப்பு பின்பக்கம் அவிழ்ந்திருக்கிறது. இதை என்னல் கட்டமுடியாது. தயவுசெய்து எனக்காக தாங்கள் கட்டிக்கொடுப்பீர்களா?' என்று சொல்லிக்கொண்டு எழுந்திருந்து பொம்மையைத் தன் தாயின் மடியில் கிடத்தினள். தாயார் பொம்மையின் உடுப்பைக் கட்ட ஆரம்பித்தார்கள். அப்போது எல்வி தன் தாயின் கையை உற்றுப்பார்த்து தன் முகத்தைச் சுளித்துக்கொண்டு சற்று அப்புறம் சென்று, 'அம்மா! உங்களுடைய கை என்ன அவலக்ஷணமாயிருக்கிறது! இந்தக் கையால் இனியேல் என்னைத் தொடவேகூடாது அம்மா' என்று மிகவும் வெறுப்பாய்ச் சொன்னள்.

தாயார் உடனே, தன் பிள்ளையைத் திடுக்கிடப்பண்ணின தன் கையைப் பார்த்துவிட்டு துக்கமான முகத்துடன் உருக்கமாய் தன் பிள்ளையைப் பார்த்து, 'எல்வி, இதற்குமுன் ஒருநாளும் இதைப் பார்த்ததில்லையா? நல்லது, அது அவலக்ஷணமாய்த்தான் இருக்கிறது. ஆனல் உன் கையைப்போல அவ்வளவு அழகும் சுத்தமுமாய் இருந்த இந்த என் கை எப்படி அவலக்ஷணமடைந்தது என்று உனக்குச் சொல்லுகிறேன்' என்றள்.

அப்போது எல்஬ி தன் தாயின் கையைப் பார்த்துக்கொண்டு அவள் கிட்டப்போனாள்.

தாயார் அவளைப்பார்த்து, 'என் அருமைப்பிள்ளையே, நீ மிகவும் சின்னக் குழந்தையாய் இருக்கும்போது, நம்முடைய வீட்டில் ஒரு ஆயாள் இருந்தாள். அவள் வாலிபப்பெண்ணும், மிகவும் கவலையீனமுமுள்ளவள். ஒருநாள் அவள் உன்னைக் கீழே வைத்துவிட்டு சன்னலண்டை போய்த் தெருவில் நடமாடிக்கொண்டிருக்கும் ஜனங்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள். நீ தரையில் அங்குமிங்கும் ஊர்ந்துகொண்டு வரும்போது எப்படியோ கைப்பிசகாய் ஒரு நெருப்புப்பொறி உன் உடுப்பில் பட்டு தீப்பற்றிவிட்டது. நான் தற்செயலாய் வீட்டுக்குள் வந்தேன். உன்னை அபாயத்திலிருந்து ரக்ஷிக்கும்படி நான் தீயை அணைக்கப் பிரயாசப்பட்டபோது இந்த என் கை வெந்து இப்படி அவலக்ஷணமாய்ப் போய்விட்டது' என்று மிகவும் உருக்கமாய்ச் சொன்னாள். இதைக் கேட்டதும் எல்஬ி கொஞ்சநேரம் மரம்போல் நின்றுவிட்டு, அப்பால் தான் அவலக்ஷணம் என்று சொன்ன தன் தாயின் கையை எடுத்து மிகவும் ஆத்திரத்தோடு முத்தமிட்டு, 'அம்மா! நான் இதை இனி அவலக்ஷணமான கை என்று சொல்லாமல், என் நிமித்தம் அழகை இழந்ததானதால் என் நேச கை என்றே சொல்லுவேன்' என்றாள்.

இயேசுநாதரும் உயிர்த்தெழுந்தபின், தம்மை அவருடைய சீஷருக்குக் காண்பித்தபோது, தம்முடைய கைகளையும் விலாவையும் காண்பித்தார். அவருடைய கைகள் ஆணிகளால் காயப்படுத்தப்பட்டிருந்தது. அதை அவருடைய சீஷர்கள் தக்கபடி அறியவில்லை. அவர்கள் காயப்பட்ட கைகளைப் பார்த்தும் சந்தோஷமடைந்தார்கள் என்று வேதத்தில் பார்க்கிறோம். ஏனெனில் இயேசு பட்ட காயங்களெல்லாம் தங்களுக்காகவே என்று அப்போதுதான் அவர்கள் உணரத்தொடங்கினதால் சந்தோஷமடைந்தார்கள்.

என் பிரிய பாலிய சிநேகிதனே! இயேசு பட்ட பாடுகளெல்லாம் எனக்காகவே என்றும், என் மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு என் அக்கிரமங்களின் நிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார் (ஏசா. 53: 5) என்றும் நீ உன் இருதயத்தில் தியானிப்பாயாக.

அப்படியானால் பிரகாசம் நிறைந்த அந்த மோக்ஷலோகத்தில் நாம் சேரும்போது, எல்லாவற்றைப்பார்க்கிலும் இயேசு நமக்காகப் பட்ட காயங்களே அதிகப் பிரகாசமுள்ளவைகளாய் நமக்குக் காணப்படும்.

WET SAND

ஈர மணல்

ஸ்திரீ ஒருத்தி ஓர்நாள் தன் குருவினிடம் வந்து, தான் மூட்டையாகக் கட்டிவைத்திருந்த ஈரமணலை அவர்முன் குவித்து, ' ஐயா, இதைப் பாருங்கள் ' என்றனள். குரு, ' ஈரமணல் ' என்று கூறவே, அவ்விஸ்திரீ அதன் அர்த்தம் என்னவென்று வினவ, குரு அவளையே சொல்லும்படிக் கேட்டுக்கொண்டதின்பேரில் அப்பெண், ' ஐயா, இம் மணலைப்போல் அத்தனையாய் கணக்குக்கு அடங்கக்கூடாதவையாய் என் பாவங்கள் இருக்கின்றன. இதைப்போல் பாரமாய் அவை என் மனத்தை அமிழ்த்துகின்றன. யார் என்னை இத்தனை பாவத்தினின்று நீங்கலாக்கக்கூடும் என்று ஓலமிட்டுக் கதறினள். இப்பெண்ணின் பரிதாப நிலைமையைக் கண்ட குரு, ' இம்மணலை எங்கிருந்து கொண்டுவந்தாய்? ' என்று வினவ, அவள், ' கடற்கரையினின்று கொண்டுவந்தேன்' என்று கூற, குரு ' மறுபடியும் அம்மணலைக் கடற்கரைக்கே கொண்டு போய், ஒரு குவியலாகக் குவித்து அலைவருமட்டும் காத்திருந்து சம்பவிப்பதை நோக்கிக்கொண்டிரு' என்று சொல்ல, அவள், ' மணலை அலை அடித்துக்கொண்டு போய்விடும் ' என்று மறுமொழி பகர்ந்தாள். குரு, ' அதுபோலவே, உன் பாவம் கடற்கரை மணலைப்போல் அத்தனை பெரிதாயிருந்தாலும், இயேசு பகவானின் திரு இரத்தம் அவற்றைக் கழுவி, மணலை அலையானது கடலின் ஆழத்திலே கொண்டுபோய்ச் சேர்க்குமாப்போலே, உன் பாவத்தை மன்னித்துவிட்டது ' என்று ஆறுதல் சொன்னார். அம்மாதுவும் மனந்தேறினவளாய் வீடுநோக்கிச் சென்றாள்.

THE DEATH AND RESURRECTION OF CHRIST

கிறிஸ்துசரித விருத்தங்கள்

1. தோட்டமே தேனில் பண்டு தொடங்கின பாவசாபம்
தோட்டம் கெத்சே மனேயில் தொலைந்திடும் பார்த்திபனார்
பாட்டினு லென்றறிய; பாடுகள் மிகவாய்ப் பட்டார்
காட்டிலே முழங்கா லூன்றி கர்த்தனை வேண்டியேதான்.
2. முப்பது காசுக்காக முழுப்பித்தன் யூதாசென்போன்
செப்பினவாறேவந்து திருமுகமதிலே முத்த
ஒப்புடன் பகைவர் வந்து உன்னதன் கையைக்கட்டி
குப்பெனக் கொண்டுபோனார் குறும்புகள் காட்டித்தானே.

3. தலத்ததிகாரியான தக்கபிலாத்தின்பாலே
தலைவனைக் கொண்டுபோய்ப்பின் தர்க்கித்தார் குருசிலேற்ற
பலவழியதனைமாற்றப் பார்த்தனன் ப்லாத்தென்போன்தான்
குலத்தவ ரெதிர்த்ததாலே கொடுத்தனன் தீர்ப்பும்தானே.

4. எருசலேம் நகருக்கப்பா லிருக்கும்கோல் கோதாமேட்டில்
திருச்சுத னேசுவைத்தான் குருசிலே யறைத்துத்தூக்க,
அறிந்திடார் இவர்செய்பாவம் அப்பனே மன்னியுமென்று
திருவாய் மலர்ந்துகேட்டு ஜீவனும் விட்டார் தானே.

5. சஞ்சலத்தாலே பூமி சட்டெனக்குலுங்க, வெய்யோன்
தஞ்சுடர் தனைமறைக்க தருணமே திரையுங் கீற
நெஞ்சிலே யடித்தலற நிறையெருசாலேம் மாதர்
அஞ்சிடா பல ரேசையன் அதிசயன் சேயென்றாரே.

6. மரித்தபின் மூன்றாம் நாளில் மறுபடியுமுயிர்த்து
அருமையாம் சீடரோடு ஐயெட்டு நாளாய்த் தங்கி
தாணிமீ தெங்குஞ்சென்று தன்னுபதேசந் தன்னை
பிரசங்கம் செய்யச்சொல்லிப் பிரிந்தனர் பரத்தின் நேரே.

Joel Singh.

PLAGUE

பிளேக்

எலியானது நம் இந்துதேச ஜனங்களுக்குப் பிராணச்சேதத்திற்கு ஏதுவான சத்துருவாயிருக்கிறது. பிளேக் வியாதிக்கு எலி முக்கிய காரணமென்று ஆங்கிலேய வைத்தியர் கண்டுபிடித்திருக்கிறார்கள். எலிகளில்லாவிட்டால் ஜனங்களுக்குப் பிளேக் வியாதியின் வதை இராது. பிளேக் வியாதியினால் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிற எலிகளின் உடம்பின்மேலிருந்து ஒருவிதமான கொசு ஜனங்களுடைய தேகத்தில் போய் கடிப்பதினால் அந்த வியாதி ஜனங்களுக்கு ஒட்டிக் கொள்ளுகிறது. அந்தக் கொசுக்கள் எலிகளின் சரீரத்தை வாசஸ்தலமாய்க்கொண்டு குடியிருக்கும். பிளேக் தொடங்கின எலிகள் செத்துப்போம். செத்த எலிகளின் சரீரத்தில் அந்தக் கொசுக்களுக்கு ஆகாரமின்மையால் அவைகள் தங்கள் ஆகாரத்திற்காக மற்ற எலிகளின் சரீரத்தில் சேரும். ஒரு வீட்டிலுள்ள எலிகளெல்லாம் பிளேக் வியாதியினால் நிர்மூலமாகிவிடுகிறபடியால், அந்தக் கொசுக்கள் ஆகாரத்திற்காக மனுஷருடைய சரீரத்தைத் தேடி உடைகளிலும் படுக்கை

களிலும் ஏறிக்கொண்டு ஜனங்களைக் கடிக்கும். கடித்தவுடனே அந்த விஷம் மனிதரின் ரத்தத்தில் சேர்ந்து அவர்களைப் பிளேக்கினால் வாதிக்கும். இந்த வியாதி பெரிய ஜன நஷ்டத்தையும், கஷ்டத்தையும், சங்கடத்தையும் உண்டாக்குகிற பெரிய சத்துருவாயிருக்கிறதென்று தெளிவாகத் தெரிகிறது. இந்துதேசத்தில் இவ்வியாதியை நிறுத்த வேண்டுமானால் இந்த பயங்கரமான எலிகளை முதலாவது நாசஞ்செய்ய வேண்டும்.

பூனைகளை வளர்த்து எலிகளை நிர்மூலஞ்செய்யலாம். அல்லது கூண்டுகளைவைத்துப் பிடித்துக் கொல்லலாம். ஒவ்வொரு ஸ்திரீயும் தன் தன் வீட்டைச் சுத்தமாக்கிவைத்து, வீட்டிலுள்ள ஆகார வஸ்துக்களை எலிகளுக்குக் கிடைக்காமல் செய்தால், அந்த வீடு எலிகள் வசிக்க அனுகூலமாயிராது. அப்படிப்பட்ட வீடுகளில் எலிகள் பிரவேசிக்கவு மாட்டாது. எலிகளிருந்தால் அபாயம் சம்பவிக்கும் என்பதை மறந்து, வீட்டை அவைகளுக்கு அனுகூலமாகச் செய்தால், வீட்டிலுள்ளவர்களுக்கும், அவர்கள் மூலமாய் மற்றவர்களுக்கும், பிளேக் வியாதியும், மரணமும் சம்பவிக்கும்.

A LIVING SACRIFICE. Part I

ஜீவபலி. ரோம. 12: 1.

நாம் பிழைக்கும்படி சாகத்தான் வேண்டும். இதுதான் நமது ஜீவியத்தின் மத்திப பிரமாணம். நாம் நம்மைத்தானே இரட்சித்துக் கொண்டும் நமது ஜீவியத்தை பாத்திரமாக்கிக்கொண்டும், உண்மையாய் தேவனுக்கு மகிமையாகவும், உலகத்துக்கு ஆசீர்வாதமாகவும் இருக்கக் கூடாது. பலிபீடமானது ஒவ்வொரு ஜீவியத்தின் முன்னுக்கும் நிற்கிறது. உத்தமமும் மேன்மையுமான எல்லாவற்றையும் அதில் செலுத்தித்தான், நாம் அந்த பலிபீடத்தைக் கடந்துபோகலாம்.

நமது மார்க்கத்தின் சாதனைகள் எல்லாம் நாம் நமது சரீரங்களை ஜீவபலியாக தேவனுக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும் என்று பவுல் அப்போஸ்தலன் எழுப்புதல் செய்வதிலே அடங்கியிருக்கிறது. முற்காலத்திலே ஜனங்கள் ஒரு ஆட்டுக்குட்டியைக் கொண்டுவந்து, அதை தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, அக்கினியால் தகனிக்கும்படி பலிபீடத்தில் வைத்தார்கள். அந்தப்படியே, நாமும் நம்முடைய சரீரங்களை அவருக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும். ஒரு ஊழியக்காரனாகவோ, பிரசங்கியாகவோ, ஆத்தும இரட்சகனாகவோ இருப்பதல்ல முதலாங்

காரியம். கிறிஸ்தவ ஜீவியத்தில் முக்கியமான காரியம் என்னவென்றால், நாம் நம்மைத்தானே தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, பலிபீடத்தில் வைப்பதுதான். இது நாம் அறியவேண்டிய முக்கியமான காரியம்.

கிறிஸ்துவுக்கு நம்மைத்தானே ஒப்புக்கொடுப்பதைப் பார்க்கிலும், அவருக்காகப் பேசி வேலைசெய்வது அதிலேசான காரியம்.

தேவனுக்கு நம்முடைய இருதயங்களை ஒப்புக்கொடுப்பதைப் பார்க்கிலும், சில சுறுசுறுப்பான செய்கைகளைச் செய்வது அதிக லேசு. ஆனால் இருதயந்தான் முந்தவேண்டும். இல்லாவிட்டால் அதி பெரிதான ஈவுகளும் ஊழியங்களும் அங்கீகரிக்கப்படுகிறதில்லை.

ஒருவர் சொல்லுகிறபடி, நமது எஜமான் விரும்புகிறது, உன் வேலையையல்ல,—உன்னைத்தான் ; கீழ்ப்படிதலுள்ள ஆவியும், விசுவாச இருதயமுமே.

ஜீவபலியைப்பற்றிச் சிந்திப்போம் :—பலியென்றால், தேவனுக்கு மெய்யாய் ஒப்புக்கொடுக்கப்பட்டு, என்றென்றும், முற்றிலும், அவருக்கே உரியதாயிருக்கிற பொருள்தான். அதைத் திரும்ப நாம் ஒருக்காலும் எடுத்துக்கொள்ளக்கூடாது. ஒருவன் ஒரு ஆட்டுக்குட்டியை தேவனுடைய பலிபீடத்தின்மேல் வைத்துவிட்டு, கொஞ்சநேரத்துக்குப் பிற்பாடு அதைத் திரும்ப எடுத்துக்கொண்டு போய்விடக்கூடாது. நாம் இன்றைக்கு தேவனுடையவர்களாயிருந்து, நாளைக்கு நம்முடையவர்களாயிருக்கக்கூடாது. நாம் அவர் ஏற்றுக்கொண்டிருக்கிற பலியாயிருந்தால், எப்போதும் அவருடையதாய்த்தான் இருப்போம்.

நாம் நம்மைத்தானே எப்படி பலியாய் கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்கலாம்? நமது இருதயத்தையும், சித்தத்தையும், சத்துவங்கள் அனைத்தையும் அவருக்கு முற்றிலும் பிரதிஷ்டை செய்வதினால்தான். பூரண கீழ்ப்படிதல், பிரதிஷ்டைதான். போர்ச்சேவகன் அதை அறிகிறான். அவன் தனக்குச் சொந்தமானவனல்ல, தன் சொந்த உபாயங்களைச் செய்ய, அவன் தனக்காகவே நினைக்கிறதில்லை. அவனுக்கு ஒரே ஒரு கடமைதான். அது கீழ்ப்படிதல். ஒருவன் தன்னைப் பலியாய் ஒப்புக்கொடுக்கவேண்டும் என்பதின் கருத்து இதுதான்.

ஜீவபலியின் கருத்து என்னவென்று சிந்திப்போம் : முற்காலத்திலே பலியிடக் கொண்டுவரப்பட்ட மிருகம் கொல்லப்பட்டு, பலிபீடத்தின்மேல் வைக்கப்பட்டது. ஆனால் நாம் ஜீவனோடே நம்மை ஒப்புக்கொடுக்கவேணும். முற்காலப் பலிகளை அக்கினியானது தகனித்தது. தேவ அன்பின் அக்கினியும், ஆவியும் நமது இருதயங்களை சுத்திகரித்து திவ்விய ஜீவனால் நிரப்பித் தகனிக்கிறது.

பெந்தேகோஸ்து நாளில் அக்கினிவரத்தைப் பெற்றவர்கள், புது மனுஷரானார்கள். அவர்கள் ஆத்துமாவிலே புது ஜீவன், புது ஆவி,

புது வைராக்கியம் உண்டாயிற்று. அவர்கள் கிறிஸ்துவுக்காக அன்பினுல் நிறைந்த அக்கினியுள்ளவர்களாயிருந்தார்கள். உடனே அவர்கள் ஒரு ஊழியத்தில் பிரவேசித்தார்கள்; அதிலே அவர்கள் வைராக்கியம் முற்றும் சுவாலித்து எரிந்தது.

ஜீவபலியானது, நமது ஜீவியம் முழுவதையும் அடக்கினதாயிருக்கிறது. இப்போதிருக்கிற ஜீவியத்தை மாத்திரமல்ல, பிற்கால ஜீவியம் அனைத்தையும் அது குறிக்கிறது. நமது ஜீவியம் ஒரு வச்சிரக்கல் அல்ல, ஓயாமல் வளருகிற தன்மையுள்ள ஒரு வித்தாயிருக்கிறது. ஒரு நல்ல பிரசங்கி சொல்லுகிற ஒரு திருஷ்டாந்தம் என்னவென்ருல்:—நான் ஒரு கருவாலிமரக் கொட்டையைத் தரையிலிருந்து எடுத்து, என் காதில் வைக்கிறேன். அது என்னிடத்தில் என்ன சொல்லுகிறது என்ருல், 'கொஞ்சக்காலத்துக்குப்பின், குருவிகள் என்னண்டை வந்து கூடுகட்டும், மிருக ஜீவன்கள் நிழல் தேடி என்னிடத்தில் வந்து தங்கும். கொஞ்சக்காலத்துக்குப் பின், நான் ஒரு வீடாகக் கட்டப்பட்டு, என் கூரையின் கீழ் வருவோருக்கு, புயலுக்கு ஒதுங்க ஒதுக்கிடமாவேன். நான் ஒரு கப்பலாகி ஜனங்களைப் பத்திரமாய் சமுத்திரத்திலே சுமந்துபோகையில், புசல்காற்று என்மேல் வீணுயடிக்கும்.' 'புத்தியீனமான சின்ன கருவாலிக் கொட்டையே நீ இதெல்லாம் ஆவாயா?' என்று நான் கேட்கிறேன். அது மாறுத்தாமாக, 'ஆம், தேவனும் நானும்' என்கிறது. ஆம் தேவகிருபையால், அந்த மாம் வளர்ந்து அப்படியே பிரயோஜனமுள்ளதாகும்.

அந்தப் பிரசங்கி பின்னும் சொல்லுகிறதென்னவென்ருல்:—ஒரு கூட்டத்திலுள்ள ஒரு பிள்ளை மெல்லிய சப்தமாய்ப் பேசினுற்போல் கேட்கிறது. அதென்னவென்ருல், 'கொஞ்சக்காலத்துக்குப் பின், நான் அநேகருக்குப் பெரிய ஆசீர்வாதமாயிருப்பேன். சோர்ந்துபோன பலர் என் பெலத்திலே வந்து சாய்வார்கள். துக்க வீடுகளிலே நான் ஆறுதல் சொல்லிக்கொண்டிருப்பேன். இழந்துபோன பாவிகளுக்கு கிறிஸ்துவின் இரட்சிப்பைப்பற்றி பேசுவேன். கிறிஸ்துவின் அழகிலே முழுப்பிரகாசமாய்ப் பிரகாசித்து என் மீட்பருடனே மகிமை பெற்றவர்களிடையில் இருப்பேன்' என்பதே. 'ஆ, பெலவீன சிறுமியாகிய நீ, அப்படியெல்லாம் ஆவாயா?' என்று கேட்கிறேன். அவள் மாறுத்தாமாக, 'ஆம், கிறிஸ்துவும் நானும்' என்கிருள். இந்த சிறுமியுடைய ஜீவியத்தின் ஆசீர்வாதமான தாலந்துகளெல்லாம் பலிபீடத்தில் ஜீவபலியாய் செலுத்தப்பட்டால் அப்படியே ஆவாள்.

'கிறிஸ்துவும் நானும்' என்ற இந்த எண்ணத்தோடே நாம் நம்மைத்தானே ஜீவபலியாக ஒப்புக்கொடுப்போமாக. இந்த ஆவியினுல் ஏவப்பட்டு நாம் ஜீவியம் செய்தால், அது முதலாவது நமக்குத்தானே

அதிக சந்தோஷமாயிருக்கும். அதுமாத்திரமல்ல, உலகத்துக்கு அதிக பிரயோஜனமுள்ளவர்களாயும், நம்முடைய பரமபிதாவின் நாமத்தை அதிகமாய் மகிமைப்படுத்துகிறவர்களாயு மிருப்போம்.

SOME HINTS FOR THE HOT WEATHER

வேனிற்காலக் குறிப்புகள்

இந்தியாவில் வேனிற்காலம் மழைகாலம் என்ற இரண்டே பருவங்களுண்டென்று சொல்லலாம். இப்போது வேனிற்காலம் தென்னிந்தியாவில் துவங்குகிறபடியால் பின்வரும் சில சுகாதாரக் குறிப்புகளைக் கவனிப்பது நலம்.

தலைநோவு, ஜுரம், எரிபந்தம்; பித்தவிரிவு, அஜீரணம், மூக்கில் இரத்தம் வடிதல், தலைமயக்கம், கண்பார்வை மங்குதல், வேனிற்கட்டி, வேர்க்கூர், வெயிலடிபட்டு திடீரென்று மாணமடைதல் முதலிய பல நோய்கள் வேனிற்காலத்தில் கவனிக்கவேண்டிய சுகாதார விதிகளை அனுசரியாததால் உண்டாகின்றன.

அவசரமின்றி 11 மணி முதல் 3 மணி வரை வேனிற்காலத்தில் வெளியிற் போகலாகாது.

வெள்ளை அல்லது சிவப்பு உரை போட்ட குடை பிடித்துக்கொள்வது நல்லது. காலில் பாதரட்சை அணிவது வெயில்காலத்திற் கேற்றது. குடை பிடிப்பதோடு தலையில் துணியாவது தொப்பியாவது போட்டுக்கொள்ளலாம். கூடுமானல் தளர்த்தியான மெல்லிய வஸ்திரம் அணியவேண்டும்.

அடிக்கடி ஸ்நானஞ்செய்து தலைக்கு தண்ணீர் ஊற்றுவது நலம். தலை முழுகினவுடன் வெயிலில் போவது நல்லதல்ல.

வீட்டுத்தாழ்வாரம் ஜன்னல்களுக்கு பிரகாசமான வெயிலடிக்கும் போது தட்டிமறைவு கட்டுவது நல்லது. வீட்டைச்சுற்றி மாஞ்செடி வைத்து ஜலம் தாராளமாய் ஊற்றினல் காங்கை அதிகம் தெரியாது.

அதிகக் காரமான உணவு சாப்பிடாமல் காரம் அதிகமில்லாத கறி பதார்த்தங்களும் பால் தயிர் வெண்ணெய் மோர் முதலியவைகளும் சேர்ப்பது நலம்.

வெயில்காலத்தில் கிடைக்கக்கூடிய நல்ல பதார்த்தங்களை வாங்கி சாப்பிடவேண்டும். இளநீர், நுங்கு, முலாம்பழம், வெள்ளரிப்பழம், எலுமிச்சம்பழச்சாறு, வாழைப்பழம் முதலியவை ஏழைகளும் வாங்கிச் சாப்பிடலாம். இவற்றோடு கூடுமானல் பனிக்கட்டியால் செய்த ஐஸ்கிரீம், புட்டிகளில் காற்றடக்கி வைத்திருக்கும் பானங்கள் (Aerated water) முதலியவை சாப்பிடுவது நல்லது.

THE JOY OF CHRISTIAN LIFE

'கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்கள் பெலன்'

ஓர் மெய்க்கிறிஸ்தவனைப்போல் சந்தோஷமுள்ளவன் யார்? அவன் அனுபவிக்கும் பாக்கியம் வேறு யாருக்குண்டு? எக்காலத்திலும் மகிழ்ச்சியாயிருக்கிறான். துக்கமும் துன்பமும் அவன் சந்தோஷத்தை மாற்றாது. 'அத்திமரம் துளிர்விடாமற்போனாலும், திராட்சச்செடிகளில் பழம் உண்டாகாமற்போனாலும், ஒலிவமரத்தின் பலன் அற்றுப்போனாலும், வயல்கள் தானியத்தை விளைவியாமற்போனாலும், கிடையில் ஆட்டுமந்தைகள் முதலற்றுப்போனாலும், தொழுவத்திலே மாடு இல்லாமற்போனாலும், நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன். என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன்' என்று சொல்லுவான். இது உள்ளான சந்தோஷமாய் மிக்க ஆழமுள்ளதாயிருக்கிறதே. தனமும் அந்தஸ்தும் செல்வாக்கும் இவ்வுலகிலுள்ள எதுவும் இவ்வித சந்தோஷத்தை ஒருவனுக்குக் கொடுக்கக்கூடாததாயிருக்க, கிறிஸ்தவன் இச்சந்தோஷ நிலைமையை எப்படி அடைகிறான்? இவ்வித மகிழ்ச்சிக்கு இரகசிய காரணம் என்னவென்று சிந்திப்போம்.

கிறிஸ்தவனென்றால் கிறிஸ்துவை உடையவன். கிறிஸ்துவுக்குள் சகல பரிபூரணமும் வாசமாயிருக்கிறது. பாவத்தினால் கெட்டுப்போன உலகத்திற்கு கிறிஸ்து பாவத்தினின்று இரட்சிப்பையும், பரலோக வாழ்வையும், சதாகால பாக்கியத்தையுங் கொண்டுவந்தார். சுவிசேஷம் மனுஷருக்கு சந்தோஷத்தையுண்டாக்கும் நற்செய்தி. கிறிஸ்துவின் பிறப்பும் ஜீவியமும், பாடு மரணமும், உயிர்த்தெழுந்து பரமேறி மத்தியஸ்தஞ்செய்தலும் மனுஷருக்குப் பேரின்பபாக்கியத்தைக் கொண்டு வந்தது. கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட எவனும் அவருக்குள்ளடங்கிய சொல்லிமுடியாத ஐசுவரியத்தை அனுபவிக்கிறான். அவரது மாட்சிமையான அன்பே அவனைத் திருப்திசெய்கிறது. திருப்திசெய்யத் தக்க தொன்றும் இவ்வுலகிலில்லை. கிறிஸ்துவின் அன்பே மெய்யான திருப்தியும் பாக்கியமுங் கொடுக்கும். கிறிஸ்துவின் அன்பைவிட்டு இவ்வுலகிலுள்ள எதுவும் தன்னைப் பிரிக்க சக்தியற்றதென்று பரிசுத்த பவுல் அப்போஸ்தலன் தைரியமாய் ரோம. 8: 35-39 ல் உரைக்கிறார்.

இவ்வித பாக்கியத்தை அனுபவிக்கும் மெய்க்கிறிஸ்தவர்களே, நீங்கள் மென்மேலும் வாழ்வீர்களாக! இவ்வித சந்தோஷத்தைத் தேடாமல் நிலையற்ற அற்பவாழ்வில் மனம் வைத்துத் திரிவோரே, சீக்கிரம் உங்கள் சந்தோஷம் சஞ்சலமாக மாறும். உங்கள் அற்ப சந்தோஷம்

நீர்மேற்குமிழிபோலும் முள்ளிற்பற்றின நெருப்புப்போலும் வெடித்து அணைந்துபோகும். தாமதமின்றி மெய்வாழ்வைக் கிறிஸ்துவினிடம் வந்து அடையுங்கள். இவ்வாழ்வு தேடிவரும் யாவருக்கும் இலவசமாய்க் கிடைக்கும். 'ஓ தாகமாயிருக்கிறவர்களே, நீங்களெல்லாரும் தண்ணீர்களண்டைக்கு வாருங்கள். நீங்கள் வந்து பணமுமின்றி விலையுமின்றி திராட்சரசமும் பாலும் கொள்ளுங்கள். நீங்கள் எனக்குக் கவனமாய்ச் செவிகொடுத்து, நலமானதைச் சாப்பிடுங்கள். அப்பொழுது உங்கள் ஆத்துமா கொழுப்பான பதார்த்தத்தினால் மகிழ்ச்சியாகும்' என்ற அழைப்பை ஏற்றுக்கொள்ளுங்கள். இது இலவசமானது.

'உம்மாலே யன்றி இரட்சகா,
பேர் நன்மை காண்கிலேன்.
மெய்ச்சமாதானம் இன்பமும்
வேறெங்கும் பெற்றிலேன்
வேறொன்றினாலும் இரட்சகா
மெய்ப்பாக்யம் அடையேன்
உம்மாலேதான் என் ஆண்டவா
சந்தோஷமாகிறேன்.

பூலோகப் பொருள் இன்பத்தை
பின்பற்றி நம்பினேன்
சற்றேனும் அற்பவாழ்வினால்
நான் திருப்தியாகிலேன்.
இப்போதோ உம்தன் இரட்சிப்பை
கண்டிளைப் பாறினேன்
ஆனந்தம் பொங்கி இன்பமாய்
நான் பாடிப் போற்றுவேன்.'

A WOMAN'S WEALTH

ஓர் ஸ்திரீக்கு இருக்கவேண்டிய தனம்

விவாகத்துக்கென்று தனக்கு ஓர் பெண் நியமித்துக்கொண்ட வாலிபனொருவன் அச்சமாசாரத்தை வயோதிபனான தன் நண்பனுக்குச் சொன்னான். அவ்வயோதிபரோ கல்வியில் சிறந்தவரும் தேவதா பக்தியில் தேர்ந்தவரும் அமைதியான குணமுடையவருமாயிருந்தார். அவர் வாலிபனின் மணவிஷயத்தைக்குறித்து ஆராய்ந்து அப்பெண்ணிடத்தில் பிற்கால சந்தோஷத்திற்குரிய காரியங்கள் உண்டோ என்றார்.

அதற்கு வாலிபன், 'ஆம் ஆம், உண்டு. அவள் கீர்த்திபெற்ற குடும்பத்தைச் சேர்ந்தவள்' என்றான்.

அவ்வயோதிபரோ மறுவார்த்தை பேசாமற் கரும்பலகையண்டை சென்று சீமைச்சுண்ணும்பு எடுத்து அவ்வாலிபன் பிரமிக்கத்தக்கதாக ஒரு பூஜ்யம் வரைந்தார்.

பிறகு வாலிபன்: 'அவள் மகாரூபவதி' என்றான்.

அவர் திரும்ப இன்னொரு பூஜ்யம் அதன் பக்கத்தில் வரைந்தார்.

வாலிபன்: 'அவளுக்குத் திரண்ட ஐசுவரியம்' என்றான். பின்னும் அதன் பக்கத்தில் இன்னொரு பூஜ்யம் வரைந்தார்.

வாலிபனுக்கு உண்டான ஆச்சரியத்திற்கோ எல்லை இல்லை என்றே சொல்லவேண்டும். அவன், 'அத்திரண்ட ஆஸ்திக்கு அவளொருத்தியே பாத்தியமுடையவள்' என்று சொன்னான்.

பெரியவர் பின்னையும் ஒரு பூஜ்யம் வரைந்தார்.

வாலிபனுடைய ஆச்சரியம் பின்னையும் அதிகரித்து, 'அவள் மகா குணசாலி' என்றதும், பெரியவர் பின்னும் ஓர் பூஜ்யம் போட்டார்.

வாலிபன்: 'ஐயா, நான் ஒன்று சொல்ல மறந்தேன். அவள் தேவ தாபக்தியில் சிறந்தவள்' என்று சொல்லவே, பெரியவர், அதை ஏன் முந்தி சொல்லவில்லை என்று சொல்லி, ஒன்று என்னும் இலக்கத்தை அந்த ஆறு பூஜ்யங்களுக்குமுன் அழுந்த வரைந்து, அவனைப்பார்த்து, 'பக்தியில்லாமல் நீ சொன்னவைகள் யாவும் பிரயோஜனமற்றவை, நீ கடைசியில் சொன்னதோ முன் சொன்ன யாவுக்கும் பெறுமானம் தந்தது' என்று சொன்னார்.

LESSONS FOR FAMILY WORSHIP

வேத வாசிப்பு ஒழுங்கு

1918-ஆம் ஏப்ரல் மீ

1	தி.	2 சாமு.	1.	1—12	11	வி.	2 சாமு.	12.	13—23	21	ஞா	2 சாமு	18.	19—33
2	செ.	,,	1.	13—27	12	வெ	,,	13. / 14	37-39 / 1—11	22	தி.	,,	19.	1—15
3	பு.	,,	2.	1—17	13	ச.	,,	14	12—24	23	செ	,,	19	16—30
4	வி.	,,	5.	1—12	14	ஞா.	,,	14.	25—33	24	பு.	,,	19.	31—43
5	வெ	,,	6.	1—11	15	தி.	,,	15.	1—15	25	வி.	,,	22.	1—16
6	ச.	,,	6.	12—23	16	செ	,,	15	16—31	26	வெ.	,,	22	17—32
7	ஞா.	,,	7.	1—17	17	பு.	,,	16.	1—14	27	ச.	,,	22.	33—51
8	தி.		7.	18—29	18	வி.	,,	17	1—14	28	ஞா.	,,	23	1—17
9	செ.	,,	9	1—13	19	வெ.	,,	17	15—20	29	தி.	,,	24.	1—14
10	பு.	,,	12.	1—10	20	ச.	,,	18.	1—18	30	செ.	,,	24.	15—25

C. L. S. PRESS, MADRAS—1918